**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No.02/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா.**23**
**Defence**
**Court**

**Name** **:** **ரவி என்ற ஆறுமுகம்**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 01.04.2022

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசியில் மலையான் தெருவில் தொழில் செய்துவருகிறேன். நான் 2006 ம் ஆண்டில் இருநது கேபிள் டிவி தொழில் செய்துவருகிறேன். எனக்கு சக்திபாண்டியன் மூத்த சகோதரர், குமார் பாண்டியன் இளைய சகோதரர் , சேகர் மூத்த சகோதரர், சுரேஷ் இளைய சகோதரர் ஆவார்கள். குமார் பாண்டியன், சுரேஷ், சேகர் இறந்துபோனார்கள். எனது சகோதரர் குமார் பர்ண்டியன் முதலில் இறந்துபோனார்.17.12.2006

அன்று முகமது ஹனிபா, செய்யது சுலைமான், முருகேசன் என்ற அப்துல்லா என்ற மூவரும் அவரை வெட்டி கொலை செய்துவிட்டார்கள். என் சகோதரர் குமார் பாண்டியன் இந்து முன்னனி அமைப்பில் தென்காசி நகர தலைவராக இருந்தார். 2007 ம் ஆண்டு ஹனிபாவும், முருகேசன் என்ற அப்துல்லாவும் வெளியே வந்துவிட்டார்கள். நிபந்தனையை கடைபிடிப்பதற்காக தென்காசி மகளிர் காவல் நிலையத்தில் நிபந்தனை செய்துகொண்டார்கள். அவர்களுடன் மேலும் சிலர் ஆட்டோவில் வருவதும் போவதுமாக இருந்துவந்தார்கள். 14.08.2007 அன்று கேபிள் டிவி ஆபிசுக்கு போவதற்காக கிளம்பி வந்தேன். அலுவலகம் குருநாத வைத்தியசாலை பகுதியில் உள்ளது. என் வீட்டின் பக்கம் உள்ள மலையான் தெரு முனையில் என் அண்ணன் சக்தி பாண்டியன் டீக்கடை நடத்திவந்தார். சக்தி பாண்டியன் சங்கர் டீஸ்டால் என்ற பெயரில் கடை நடத்திவந்தார். அவருடன் காலை சுமார் 10.15 மணிக்கு பேசிக்கொண்டிருந்தேன். அவருடன் பேசிவிட்டு நான் அங்கிருந்து புறப்பட தயாரானபோது தெற்கில் இருந்து ஆட்கள் ஓடிவந்தார்கள். அந்த தெரு தென் வடல் தெரு ஆகும். கடை மேற்குபக்கம் பார்த்தவாறு உள்ளது. அங்கு ஆட்கள் ஓடிவருவதைப்பற்றி காரணம் கேட்டபோது கையெழுத்துபோட சென்ற தரப்பினருக்கும் இந்து பிரிவினருக்கும் தகராறு ஏற்பட்டு அடிதடி நடந்துவருவதாக சொன்னார்கள். அதனால் என்னை அந்த பக்கம் செல்லவேண்டாம் என்று கூறிவிட்டார்கள். அதனால் நான் அங்கிருந்து மீண்டும் வீட்டிற்கு சென்றுவிட்டேன். சிறிதுநேரம் கழித்து போலீசார் 10.45 மணிக்கு என் வீட்டிற்கு வந்தார்க்ள். அதன்பின்னர் தென்காசி அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள். இறந்த சடலங்களை மூடி வைத்திருநதார்கள். அவர்களில் முதலில் ராஜா முகமது என்பவரது சடலத்தை பார்த்தேன். அடுத்து என் அண்ணன்சேகர் என்பவரை பார்த்தேன். அடுத்து சுரேஷ் என்பவதை பார்த்தேன். மேலும் இரண்டு நபர்கள் இஸ்லாமியர்கள் இருந்தார்கள். அவர்கள் பெயர் தெரியவில்லை. என் மற்றொரு சகோதரர்

செந்தில் திருநெல்வேலி அரசு மருததுவமனைக்கு சிகிச்சைக்காக எடுத்து செல்லப்பட்டிருந்தார். அவரும் இறந்துவிட்டதாக தகவல் கிடைத்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியும். ஒருசிலரை மட்டும் தெரியாது. எதிரிகளை நான் கேபிள் டிவி இணைப்பு கொடுத்ததன் மூலம் எனக்கு அறிமுகம் உண்டு. என் சகோதரர் சேகர் தலையிலும், காலிலும் வெட்டுக்காயத்துடன் இறந்துகிடந்தாார். மற்றொருசகோதரர் சுரேசுக்கு கழுத்தல் வெட்டுக்காயம் ஏற்பட்டிருந்தது.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் போலீசார் விசாரனையில் என் சகோதரர் குமார் பாண்டியன் கொலை செய்யப்பட்ட பின்னர் எங்கள் குடும்பத்திற்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையே பிரச்சனை இருநதுவந்தாகவும், 14.08.2007 ம் தேதி காலை 10.00 மணிக்கு கூலக்கடை பஜார் எல்.ஆர்..எஸ்பாளையம் சந்திப்பு அருகில் முத்தாரம்மமன் கோவிலுக்கு தென் புறம் உள்ள தெருவில் வந்துகொண்டிருந்தபோது TN 72 9757 என்ற அம்பாசிட்டர் கார் நின்றுகொண்டிருந்ததாகவும் அதன் அருகிலேயே TN 72 X 0558 என்ற மோட்டார் சைக்கிள் கிடந்தது என்றும் அதற்கு நேர் மேற்கே கூலக்கடை பஜாரில் TN 76 B 9529 இ TN 76 B 4974 என்ற இரண்டு ஆட்டோக்கள் நின்று கொண்டிருந்தது என்றும் அப்போது நான் சம்பவ இடத்தில் இருந்தேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிரக்கிறேன் என்றால் சரியல்ல. அப்போது ஆட்டோக்களில் வந்த முருகேசன் என்ற அப்துல்லா, ஹனிபா மற்றும் அவரது கூட்டாளிகன் எனது அண்ணன் சக்தி பாண்டியன் மற்றும் அவர்களுடன் வந்திருந்தவர்களை அரிவாள், கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களுடன் தாக்கி மோதலில்

ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும் அதை நான் நேரில் பார்த்தாகவும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த சந்திப்பில் திருநெல்வேலி ஒரிஜினல் அல்வா என்ற பெயரிட்ட கடையின் கீழ் புறம் உள்ள தெருவில் எனது சகோதரர் சேகரை ஹனிபா அரிவாளால் மாறி மாறி வெட்டினார் என்றும் முருகேசன் என்ற அப்துல்லா அரிவாளால் முழுங்கை, இடது முழங்கை விலா பகுதியில் வெட்டினார் என்றும் அசன் கனி கத்தயால் குத்தினார் என்றும், அபுஅயூப்அன்சாரி அரிவாளால் வெட்டினார் என்றும் ராஜாமுகம்மது அரிவாளால் வெட்டினார் என்றும் அதே இடத்திலேயே எனது சகோதரர் சேகர் இறந்துபோனார் என்றும் மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதே நேரத்தில் அப்துல்லா மற்றும் அவருடன் வந்திருந்த கூட்டாளிகள் எனது சகோதரர் சுரேஷ் மற்றும் செந்திலை தாக்கிக்கொண்டிருந்தனர் என்றும் நான் பயந்துபோய் அருகில் இருந்த சந்து வழியாக தப்பி சென்று விட்டேன் என்றும் நான் பதட்டத்தில் இருந்ததால் வேறுயார்யாரை யார் யார் தாக்கினார்கள் என்று கவனிக்கவில்லை என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சிறிது நேரம் கழித்து சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தேன் என்றும் இந்த சம்பவங்களுக்கு ரகுமான் பாட்சா மற்றும் கமான் முகைதீன் ஆகியோர் துண்டுதலால் நடந்ததாக போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சகோதரர் சக்தி பாண்டியன் மீது இஸ்லாமியர் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஒரு குற்ற வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது சகோதரர் சக்திபாண்டியன் விடுதலை பெறுவதற்காக எதிரிகளுடன் செய்துகொண்ட இரகசிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் எனக்கு தெரிந்த சம்பவத்தை மறைத்து உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தென்காசி கடைவீதியில் உள்ள பள்ளிவாசல் கட்டிடம் கட்டுவதற்கு குமார் பாண்டியன் எதிர்ப்ஹப தெரிவித்துவந்தார். அவர் டிசம்பர் 6 ம் தேதி

பொதுமக்களுக்கு இனிப்பு லட்டு வழங்கியதாக இஸ்லாமியர்கள் அவர்மீது விரோதம் கொண்டிருந்தார்கள். இதனால் தான் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார். சம்பவம் நடப்பதற்கு முன்பு எனது சகோதரர் குமார் பாண்டியன் என்னிடம் இஸ்லாமியர்களால் என் உயிருக்கு ஆபத்து இருப்பதாக கூறியதில்லை. குமார் பாண்டியன் இறந்த பிரச்சனையின் தொடர்ச்சியாக தான் சேகர், சுரேஷ், செந்தில் ஆகியோர் இறந்துபோனார்கள். முருகேசன் என்ற அப்துல்லாவும், ஹனிபாவும் குமார்பாண்டியன் கொலை வழக்கிலும் இந்த வழக்கிலும் எதிரியாக உள்ளார்கள். என் சகோதரர்கள் அரிவாள் போன்ற கூர்மையான ஆயுதங்களால் தாக்கப்பட்டு வெட்டுக்காயங்களுடன் இறந்து கிடந்தார்கள். என் சகோதரர்கள் குமார்பாண்டியன் இறுதி சடங்கிற்கு இந்துமுண்ணனி தலைவர் இராமகோபாலன் மற்றும் பொன்ராதாகிருஷ்ணன் ஆகியோர் வந்திருந்தார்கள். பள்ளிவாசல் கட்டுவது சம்பந்தமாக என் சகோதரரை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அந்த பிரச்சனை சுமூகமாக முடிவடையும் நிலையில் இந்த கொலை நடந்தது. அந்த பிரச்சனை பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்ததற்கு இடையிலேயே இந்த கொலை நடந்துவிட்டது.

<u>**குறுக்கு விசாரணை**</u>

எதிரிகளுக்கும் எனது சகோதரர் குடும்பத்தினருக்கும் இடையே தனிப்பட்ட விரோதம் எதுவும் இல்லை. குமார் பாண்டியன் கொலை வழக்கில் ஹனிபா, அப்துல்லா, சுலைமான் ஆகியோர் சம்பந்தப்பட்டிருந்ததாக எனக்குநேரில் தெரியாது. கேள்விப்பட்டதுதான். போலீசார்தான் மேற்படி மூவரையும் எதிரிகள் என்று என்னிடம் கூறினார்கள். நான் இந்து முன்னனி யில் உறுப்பினராக உள்ளேன். இந்து முன்னனி இயக்கத்திற்கும் இஸ்லாமியருக்கும் தனிப்பட்ட முறையில் விரோதம் இல்லை. இந்து முனனனி சார்பில் நடந்த விநாயகர் ஊர்வலத்தில்

ஹனிபாவும் கலந்துகொண்டார். ஹனிபாவும் இந்து முன்னனியில் நடத்தும் விநாயகர் ஊர்வலத்தில் கலந்துகொள்வார். குமார்பாண்டியன் இந்து முன்னனி அமைப்பில் இருநதபோதிலும் ஹனிபாவுடன் நல்ல நட்பில் இருந்துவந்தார். தென்காசியை பொறுத்தவரை இஸ்லாமியர்கள் மற்றும் இந்துக்கள் அனைவரும் அருகருகே வசிப்பவர்கள் சுமூகமான உறவு முறையில் பழகி வருகிறார்கள். குமார் பாண்டியனுக்கும் தனிப்பட்ட முறையில் பள்ளி வாசல் கட்டுவதற்கு ஆட்சேபனை இல்லை என்றால், உண்டு. ஏனென்றால் பின்னிட்டு மோதல்கள் எதுவும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவும் அதை தவிர்ப்பதற்காகவும் எங்களுக்கு ஆட்சேபனை உண்டு. போலீசார் எங்களிடம் ஆயுதங்கள் எதையும் காண்பித்து என் சகோதரர்கள் வெட்டுக்காயத்துடன் தொடர்புடையது என்று கூறவில்லை. என் சகோதரர் குமார் பாண்டியன் பாரதிய ஜனதா கட்சி அரசியல் இருந்துவந்தார். என் சகோதரர் குமார் பாண்டியன் அரசியலில் இருந்ததால் சைக்கிள் வாடகை நிலையம் ஒப்பந்தம் எடுத்தது மற்றும் அரசு ஒப்பந்தங்களில் பங்கெடுத்து தொழில் செய்தது, வட்டி பணம் கொடுத்து தொழில் செய்து என தொழில் செய்து வந்தாரா என்ாறல் அதுபோன் தொழில் எதுவும் செய்யவில்லை. என் சகோதரர் குமார் பாண்டியன் மீது தென்காசி காவல் ி நைலயத்தில் பல்வேறு குற்ற வழக்குகள் இருந்தது என்றால் சரியல்ல. என் சகோதரர் குமார் பாண்டியன் மீது பல்வேறு குற்ற வழக்குகள் இருந்தது என்றும் அதன் காரணமாக பலரும் என் சகோதரர் குமார் பாண்டியன் மீது முன் விரோதம் கொண்டிருந்தனர் என்றும் சொன்னால் சரியல்ல. பள்ளி வாசல் கட்டுவது தொடர்பாக குமார் பாண்டியன் இஸ்லாமியர்கள் எதிர்ப்பு தெரிவித்தது சம்பந்தமாக எனக்கு நேரில் தெரியாது. குமார் பாண்டியன் கூறித்தான் தெரியும். குமார் பாண்டியன் இஸ்லாமியருக்கு எதிராக வெறுப்புணர்ச்சியுடன் செயல் பட்டதில்லை. என் சகோதரர் லட்டு

விநியோகம் செய்ததில்லை. தென்காசி ஆர்.எஸ்.எஸ் அலுவலகத்தில் குண்டுவீச்சு நடைபெற்றது தொடர்பாக இஸ்லாமியர் சம்பந்தப்படவில்லை என்றும் ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர்கள் தான் அந்த சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் என்றும், ஆர்.எஸ்.எஸ் அமைப்பினர் மீது காவல் துறையினர் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் என்னையும் கைது செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கிற்கான புகாரை ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் இருந்து கொடுத்தார்கள். குமார் பாண்டியனுக்கும் முன் விரோதம் காரணமாக பல எதிரிகள் உள்ளனர் என்றும் அவர்கள் பிரச்சனையால் என் சகோதரர் இறந்திருக்கலாம் என்றும் நான் முதல்ா விசாரணையில் கூறியுள்ள நபருக்கும் குமார் பாண்டியனுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் வேண்டுமென்றே குமார் பாண்டியன் இறப்பிற்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.